www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல் : 60 | ஆவணி - 1995 | அன்பளிப்பு : ரூபா 5/=


## உள்ளே


★ **இரத்தக் கறை படிந்த நாட்கள்...**
"முன்னோக்கிப் பாய்தல்" படுகொலைகளின் நெஞ்சை உலுக்கும் துயரங்களின் தொகுப்பு

★ **இன்னொரு மனப்புரட்சி அரங்கேறுகின்றது**
பாதுகாப்பு நிதிக்கு மக்களின் பேராதரவு

★ **கற்பூர வாசனையை கழுதைகள் அறியாது**
- கவியுரை

★ **ஆனையிறவில் குடியேற்றம் ?**


## தமிழ்க் குழுக்களுக்கு அரசியல் தீர்வு;
## விடுதலைப் புலிகளுக்கு இராணுவத் தீர்வு!

**புதிய 'இராஜதந்திர' உபாயத்தினூடாக**

# விடுதலைப் போரை ஒடுக்க
# சந்திரிகா அரசு சதி!

*புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினால், தமிழினத்தின் தனித்துவத்தையும் உரிமைகளையும் நிலைநிறுத்துவதில் அவர்கள் கண்ணாய் இருப்பர் என்பதால் -*

*புலிகளை 'இராணுவத் தீர்வு' க்கு உரியவர்கள் என ஒதுக்கி விட்டு, "தமிழர்களின் பிரதிநிதிகள்" என்ற பெயரில் - தமிழர்களுக்குத் துரோகமிழைத்த குழுக்களை அழைத்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதன்மூலம் -*

*"அரசியல் தீர்வு" என்ற போர்வையில், தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க சந்திரிகா அரசு சதிசெய்கின்றது.*

(2ஆம் பக்கம் பார்க்க)



ஹாய் ..... பாட்டி!
நீயென்ன செய்கிறாய் இங்கே?
முன்னேறிப் பாய்ந்தோரின்
மூர்க்கம் தாங்காமல்
எல்லோரும்
' மூட்டையைக் ' கட்டிய பிறகும் -
வீட்டோடேயே வீற்றிருக்கிறாயே
சங்கதி என்ன?
போர் நீளும் பூமியிதில்
தள்ளாடும் வயதுனக்கு
என்னம்மா அலுவல்?
ரத்தம் தெறிக்கின்ற
யுத்த நிலத்தில்
சத்தமில்லாமல் குடிசைக்குள்
என்ன செய்து கொண்டு ... அட!
அதென்னம்மா கையில்!
தேநீரா..... !? அட்டகாசம்!
கொண்டு வா தாயே.
எதிர்ப் பாய்ச்சலாகப்
புலிப் பாய்ச்சல் செய்த
களைப்போடிருக்கிறோம்
கொண்டுவா!
குண்டு மழை நடுவிலும்
குழந்தைகளுக்குத் துணையாய்
அடுப்பெரித்தவளே!
நீ கஞ்சியூற்றினாலும்
அது பலம்!
கழனித் தண்ணீரூற்றினாலும்
அது விசை!
துளிருக்குச் சத்தேற்றும்
வேரே .. ! நம்பு -
துளிர்கள் விண்ணோக்கியே
நிமிரும்;
மண் நோக்கியல்ல!

தி. இனியவன் ○

## தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# தமிழரின் தேசிய பலமும் அவர்களின் அரசியல் உரிமைகளும்

*'' தமிழர்களுக்கு அரசியல் தீர்வு*
*புலிகளுக்கு இராணுவத் தீர்வு''*

சிங்களப் பேரினவாதத்தைப் பொறுத்தவரையில், இது ஒரு சிறந்த சித்தாந்தமாக அதற்குத் தென்படலாம்; ஆனால், ஈழத் தமிழர்களுக்கு இது ஒரு சிறந்த் கேலிக்கூத்து!

இதைப்போன்றுதான் சிங்களப் பேரினவாதத்தின் சில அறிவிப்புகள், தமிழ் மக்களுக்குச் சிரிப்பையும் சில சமயம் கோபத்தையும் வரவழைக்கும்.

''தமிழ் மக்கள் போராட்டத்தை ஆதரிக்கவில்லை'' எனும்போது, தமிழினம் தனக்குள் சிரிக்கும்.

''தமிழருக்கு தாயக நிலம் இல்லை'' எனும்போது. தமிழினம் கோபக்கனலை வீசும்.

''இது தமிழருக்கு எதிரான போர் இல்லை'' எனும்போது, தமிழினம் பல்லை நெருடும்.

தமிழ் மக்கள் தங்களது அரசியல் உரிமைகளைப் பெற்றுவிட முயல்வதை, சிங்களப் பேரினவாதம் ஒருபோதுமே விரும்பமாட்டாது. ஏனெனில் ,சிங்களப் பேரினவாதத்தின் 'முதலாம் நம்பர்' எதிரியாக தமிழ்த் தேசியமே உள்ளது. அதனால்தான் தமிழ்த் தேசியத்தின் கவசமாக இருந்து - அதைப் பாதுகாத்து - வளர்த்துவரும் புலிகள் இயக்கத்தை, சிங்களப் பேரினவாதிகள் கடுமையாக வெறுக்கின்றனர் - தீவிரமாக எதிர்க்கின்றனர்.

யார் சொன்னால் என்ன, சொல்லாது விட்டால் என்ன! ஏற்றுக்கொண்டால் என்ன, நிராகரித்தால் என்ன! - தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கப்போவது, தமிழரின் தேசிய பலம் தான்.

தமிழ் மக்கள் தங்களது அரசியல் உரிமைகளை அரசியல் அரங்கத்திலிருந்து அமைதிவழி மூலமும் பெற்றுக்கொள்ளலாம்; அல்லது போர்க்களத்திலிருந்து படைபலமூலமும் எடுத்துக் கொள்ளலாம். எந்த வழிமுறைமூலம் நடந்தாலும், தமிழரின் தேசிய பலம்தான், நிர்ணய சக்தியாக இருக்கப்போகின்றது.

இன்று தமிழரின் தேசிய பலத்தை ஒருங்கே திரட்டிவைத்திருப்பது புலிகள் இயக்கம்தான். புலிகளின் இராணுவ பலமும் - அதன் அரசியல் சித்தாந்தமும் - அதற்கு இருக்கும் மக்கள் ஆதரவும்தான், தமிழரின் தேசிய பலமாகத் திகழ்கின்றன.

புலிகள் சமாதானப் பேச்சை நடாத்தியது, தமிழரின் அரசியல் உரிமைகளைப் பெற்றெடுக்கவே ஆகும்; அது கைகூடாத நிலையிலேயே போரைத் தொடுத்து, அதைப் பெற முயல்கின்றது, ஆனால், சிங்கள அரசைப் பொறுத்தளவில். போராட்டத்தைப் பின்னோக்கி இழுக்கவே சமாதானப் பேச்சையும். தமிழின அழிப்பிற்குப் போரையும் பயன்படுத்தி வருகின்றது.

கொழும்பில் ஒட்டுண்ணி வாழ்க்கை வாழும் தமிழ் அரசியல் 'ஒடுகாலிகளை' நோக்கி, சந்திரிகா அரசு, ஒரு அரைகுறைத் தீர்வுத்திட்டத்தை வைத்துவிட்டு...

''இந்தா நீங்கள் இதைப் பிடியுங்கள்; அவர்களை நாங்கள் கவனிக்கின்றோம்'' என்ற சண்டித்தன மனோபாவமோ, அல்லது ''யாரங்கே எடு வாளை - தொடு போரை!'' என்ற நாடக பாணி வசனங்களோ, பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்ப உதவலாம்; ஆனால், இலங்கைத் தீவின் அரசியல் நலனுக்கு அந்தத் திமிர்ப் பேச்சுக்கள் உதவப்போவதில்லை - அத்துடன், சிறீலங்கா அரசின் நாசகார ஆசைகளும் நிறைவேறப்போவதில்லை.

''புலிகளின் கொடூரப் பிடியில் இருந்து தமிழ் மக்களை விடுவிக்க'' அரசு பிரயத்தனம் செய்யலாம். ஆயினும் ஆட்களையும் - பணத்தையும் புலிகள் இயக்கத்திற்கு வழங்குவதில், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, தமிழ் மக்கள் இப்போது அக்கறையுடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயற்படுகின்றார்கள்.

கருத்துக் குருடர்களுக்கு உண்மை எப்போதும் கசப்பானதாகவே தோன்றும்; சிங்களப் பேரினவாதிகளுக்கும் அப்படித்தான். தமிழர் தாயகத்தின் மீதான பிடி அவர்களது கைகளை விட்டு முற்று முழுதாகத் தூர நழுவிப் போன பின்னரும், வட - கிழக்கு நிலத்தின் அரசியல் யதார்த்தத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களோ தெரியாது!

மூடர்களுக்கு பேச்சினால் நிலைமையை விளக்குவதை விட, செயலால் விளக்குவதே சிறந்தது! O

# ஆனையிறவில் குடியேற்றம்?

☆ ''ஆனையிறவுக்கும் - வவுனியாவுக்கும் இடையிலுள்ள காடுகளைத் துப்புரவாக்கி, அங்கே சிங்களக் குடியேற்றக் கிராமங்களை உருவாக்கி - குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்தால், குடியேற்றவாசிகள் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுவார்கள் என்ற ஒரு யோசனை பற்றிய உங்களது ( அமைச்சர் பீரிஸ் ) கருத்து என்ன?''

☆ ''ஆனையிறவுப் பகுதிக்குள், வைத்திய சாலைகள் - பாடசாலைகள் - கடைகள் என்பவற்றை அமைப்பதன் - மூலம் அதை ஒரு இராணுவக் கிராமமாக மாற்றினால், மக்கள் (சிங்களவர்) வாழ்வதற்கேற்ற பாதுகாப்பான பகுதியாக ஆனையிறவுப்பகுதி மாறுமா?''

இவை கற்பனைக் கேள்விகள் அல்ல; அல்லது இருபத்தைந்து வருடங்களுக்கு முன், பேரினவாதிகள் எழுப்பிய பழைய கேள்விகளும் அல்ல!

சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் நடந்த, ஒரு முக்கிய கலந்துரையாடலில் எழுப்பப்பட்ட கேள்விகள் இவை. கேள்வி கேட்டவர்கள் சாதாரண சிங்களக் குடிமக்கள் அல்லர்; சிங்கள தேசத்து அரசியலில் ஒரு நிர்ணய சக்தியாக உள்ள பௌத்தமத உயர்பீடங்களைச் சேர்ந்த 34 பிரதிநிதிகள் அமைச்சர் பீரிஸைச் சந்தித்தபோது, எழுப்பிய கேள்விகளே இவையாகும் (9. 8. 95 ஐலண்ட் - முன்பக்கம் ).

இந்தக் கேள்விகள் சும்மா எழுப்பப்படவில்லை. சந்திரிகா அரசு வெளியிட்டுள்ள தீர்வுத் திட்டத்திலுள்ள அதிகாரப் பகிர்வு சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக விளக்கங்கள் கோருவதற்காக,'சிறீலங்கா பௌத்த காங்கிரஸ்' என்ற அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட முக்கிய கூட்டத்தில். இந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டன. இந்தக் கேள்விகளுக்கு அமைச்சர் பீரிஸ் என்ன பதில் கூறினார் என்ற விபரங்களை, குறித்த பத்திரிகை வெளியிடவில்லை.

ஆயினும், வடதமிழீழத்தில் சிங்களக் குடியேற்றங்களை அமைத்து - தமிழரின் நிலங்களை அபகரிப்பதற்கு தற்போதைய தீர்வுத்திட்டத்தில் ஏதாவது அதிகாரம் உள்ளதா? அல்லது அவ்வாறு செய்ய அரசிடம் பலம் உள்ளதா என்பதை அறிவதே, இந்தக் கேள்விகளின் உட்பொருளாக உள்ளது.

இந்தக் கேள்விகள் 'பௌத்த சங்கத்தின், இனவாதத்தை - அதாவது ஒரு இனவாதக் கருத்தியலை - மட்டுமே வெளிப்படுத்துகின்றது என்று எவரும் குறைத்து மதிப்பிடக்கூடாது. அத்துடன், சிங்கள தேசத்தின் பிரபலமான ஆங்கில நாளேடு ஒன்று - தனது முன்பக்கச் செய்தியாக - இந்தக் கேள்விகளைப் பிரசுரித்து முக்கியத்துவம் கொடுத்துள்ளதையும். வெறும் இனவாதக் கருத்தியலாக மட்டும் பார்க்க முடியாது ( தமிழரின் தாயக நிலத்தைச் சிதைக்கும் விடயத்தில், சிங்கள தேசத்தின் அனைத்துப் பத்திரிகைகளுமே தீவிரமாக உள்ளன ).

பௌத்த மகாசங்கத்தினதும், சிங்களப் பத்திரிகை உலகத்தினதும் அரசியல் சக்தியை எவருமே குறைத்து மதிப்பிடமாட்டார்கள். இந்த இரண்டு பகுதியினரதும் கருத்தியலுக்கு சிங்கள தேசத்து அதிகார பீடத்தில், ஒரு செயற்பாட்டுத் தளமும் உண்டு. அத்துடன், சிங்கள 'வாக்கு வங்கி'யின் கடிவாளம், மேற்குறித்த கேள்விகளை எழுப்பியவர்களினதும் - இதற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தவர்களினதும் கைகளிலேயே உள்ளது என்பதையும், தமிழ் மக்கள் மறக்கக்கூடாது.

இந்த இடத்தில், அண்மையில் நடைபெற்ற தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக் கூட்டமொன்றில் திரு. வே. பாலகுமாரன் எழுப்பிய கேள்வியையும், கருத்தில் எடுக்கவேண்டி உள்ளது. அதாவது, ''வலிகாமத்தின் வடபகுதியை அரசுப் படைகள் கைப்பற்றி, அங்கே சிங்கள மக்களைக் குடியமர்த்தி நிலத்தை அபகரிக்க முயன்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.''

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதியாகிய கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய், திருக்கோணமலை மாவட்டத்தின் ஒரு பகுதியாகிய தென்னை மரவடி - அமரிவயல் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாரிய இராணுவ முகாங்களுடன் சிங்கள மக்களைக் குடியமர்த்தி, அங்கே சிங்களக் கிராமங்களை அமைத்து வைத்திருப்பதைப் பார்க்கும்போது, வலிகாமத்தின் கடற்கரையோரக் கிராமங்களில், சிங்களக் குடியேற்றங்களை ஏன் அரசு அமைக்கமாட்டாது? கிழக்கு மாகாணத்தை - மணலாற்றுக் கோட்டத்தை - அந்த வழிமுறைமூலம்தானே சிங்கள அரசு ஆக்கிரமித்து வைத்திருக்கின்றது?

அரசுகள் மட்டுமல்ல, தொண்டர் நிறுவனம் என்ற போர்வையில், சர்வோதயம் என்ற சிங்கள தேசத்து அமைப்பு, தமிழர் நிலத்தில் சிங்கள பௌத்த ஆதிக்கத்தை நிலைநிறுத்த எடுத்த மறைமுக நடவடிக்கைகள்பற்றி, அதன் தலைவர் திரு ஆரியரத்னா அண்மையில் இவ்வாறு தனது பேரினவாத வேலைத்திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்;

''1960களில் யாழ்ப்பாணத்தில், தமிழர்களுடன் சேர்ந்து நான் பத்துப் பாடசாலைகளை அமைத்தேன். இவற்றின் பெயர்கள் மடிகே பன்னாசிஹற'. 'அமுனுகம சிறி விபாஸி வித்யாலய', ஆனந்தசிமஹேற வித்யாலய','எல்.எச் மெத்தானந்த வித்யாலய ...' என்றவாறு செல்கின்றன. இப்பாடசாலைகளை, தமிழ்ப் பிள்ளைகளுக்காக தமிழ்ப் பிரதேசங்களில் அமைத்தோம். அத்தோடு, அவற்றிற்கு நாம் சூட்டிய பெயர்கள் சிங்கள பௌத்த தலைவர்களுடையதாகும். இன்று (சிங்கள ) இனத்தையும் ( பௌத்த ) மதத்தையும் பாதுகாப்பதாகச் சொல்லுபவர்கள் அன்று எங்கே சென்றிருந்தார்கள்? ''( 30.7.95 - 'சண்டே ஒப்சேவர்' நேர்காணலில் ).

வடதமிழீழத்தில் - குறிப்பாக யாழ்குடாநாட்டில் - சிங்களக் குடியேற்றங்களை அமைக்கும் ஆசை, சிங்கள அரசுக்கு நீண்டகாலமாகவே இருக்கின்றது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை அண்டிய பகுதியில் - தொழிற்சாலையில் பணிபுரிந்த சிங்களத் தொழிலாளிகளுக்கான விடுதிகள் என்ற போர்வையில் ஒரு சிங்களக் கிராமத்தை திருவாளர் சிறில் மத்தியு அவர்கள் உருவாக்க முனைந்ததை, எமது மக்கள் மறக்கமாட்டார்கள். அதுபோல - எழுபதுகளின் ஆரம்பத்தில் - நாவற்குழியில் ஒரு சிங்களக் குடியிருப்பு ஒன்றை உருவாக்க அன்றைய அரசு முயன்று தோற்றதையும், தேர்தல் தொகுதிகள்தோறும் சிங்களப் பாடசாலைகளை அமைத்து - அரசமரங்கள் இருந்த இடங்களில் எல்லாம் புத்த விகாரைகளை நிறுவி - குடாநாட்டைச் சிங்கள பௌத்தமயமாக்க அரசு எடுத்த முயற்சிகளையும் எமது இளம் சந்ததிக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்தப் பின்னணிகளுடன் பார்க்கும்போது, எமது போராட்டம் பலவீனப்பட்டால்...... வடதமிழீழத்தில் முதலில் ஆரம்பிக்கப்படவிருக்கும் சிங்களக் குடியேற்றங்களின் அமைவிடம் எதுவாக அமையும் என்பதை ஊகித்துப்பார்க்க, கட்டுரையின் ஆரம்பத்திலுள்ள இரண்டு கேள்விகளுமே போதுமானவை.

சிங்களப் பேரினவாதிகளுக்கு ஆசை கொஞ்சம் அதிகம்தான்! ஆயினும், தமிழினம் இராணுவரீதியாகப் பலவீனபபட்டால், பேரினவாதத்தின் ஆசைகளை - பலத்தைப் பயன்படுத்தி. நிறைவேற்றிவைக்கும் உறுதிப்பாடும் சிங்கள அரசுக்கு உண்டு. எனவே என்றுமில்லாத அளவுக்கு, புலிகள் இயக்கத்தின் படைபலம் பெருக வேண்டிய அத்தியாவசிய தேவையை எமது மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். O



www.eelamview.com

